பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 06 2026 MONDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ரயில்வேயில் மேற்கொள்ளப்படும் மின்மயமாக்கல் பணிகள் காரணமாக டீசல் பயன்பாடு 63 சதவீதம் வரை குறைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பெட்ரோலியப் பொருட்கள் விநியோகத்தில் முறைகேடுகளை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மாநில அரசுகள் தீவிரப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

3. மாநில உரிமைகளையும், நதிநீர் உரிமைகளையும் விட்டுக்கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

4. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில், தென்கொரியாவை வென்றது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<<>>>>>

ரயில்வேயில் மேற்கொள்ளப்படும் மின்மயமாக்கல் பணிகள் காரணமாக டீசல் பயன்பாடு 63 சதவீதம் வரை குறைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

மின் மயமாக்கல் பணிகள், நிர்வாக செலவினங்களை குறைப்பதற்கும் உதவியுள்ளதாக அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

நடைபாதை வியாபாரிகளுக்கு இதுவரை 800 கோடி ரூபாய் அளவிற்கு கடன் மானியம் மற்றும் ஊக்கத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின்கீழ், 75 லட்சத்திற்கும் மேற்பட்ட நடைபாதை வியாபாரிகள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அவர்களுக்கு, 17 ஆயிரத்து 800 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு மீண்டும் தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா, நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகமும் சீராக நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

பெட்ரோலியப் பொருட்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை டுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பெட்ரோலியப் பொருட்கள் விநியோகத்தில் முறைகேடுகளை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மாநில அரசுகள் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் திருமதி சுஜாதா சர்மா கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

திமுக-வின் தோல்விக்கு குடும்ப அரசியலே காரணம் என்று முதலமைச்சர் திரு விஜய் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருச்சியில் தவெக சார்பில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்பட்டு, மக்களின் மனதை வெல்ல திமுக முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

போதைப்பொருள் புழக்கத்தை முந்தைய திமுக அரசு கட்டுப்படுத்தாத தன் விளைவுதான் தற்போதும் குற்றங்கள் தொடர்வதாக அவர் குறை கூறினார்.

சிங்கப்பெண் காவல்படை அடுத்த வாரம் முதல் செயல்படத் தொடங்கும் என்றும் திரு விஜய் அறிவித்தார்.

***(Sound Byte — விஜய் - 21 Sec.)***

<<<<<<<>>>>>>

நடப்பு கல்வியாண்டில் தொழில்நுட்ப கல்லூரிகளில் மூன்று புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் அரசு பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளதன் காரணமாக, கூடுதலாக 3 ஆயிரத்து 570 இடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பால் உற்பத்தியை பெருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ளும் என்று பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி கூறியுள்ளார்.

உலக பால் தினத்தையொட்டி, நாமக்கல் ஆவினில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நஷ்டத்தில் இயங்கும் ஆவின் நிறுவனத்தை லாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

ஆவின் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்றும் திருமதி விஜயலட்சுமி கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தூத்துக்குடி மாவட்டத்தில் சிங்கப்பெண் அதிரடிப்படையில் உள்ள பெண் காவலருக்கு காவல் ஆய்வாளர் ஒருவர் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளதாக எழுந்துள்ள புகார் அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தொடங்கப்பட்ட படையில் உள்ள பெண்ணுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து, முழுமையாக விசாரித்து சம்பந்தப்பட்டவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உரிய அனுமதியின்றி இயங்கும் மதுபானக் கூடங்களை மூட தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையில் மதுபானக் கூடத்தில் நடனமாடியது தொடர்பாக ஏற்பட்ட மோதல் காரணமாக, இளம்பெண் ஒருவர் கார் ஏற்றி கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

பெண்களின் பாதுகாப்பிற்கு போதைப்பொருள் புழக்கம்தான் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக போதைப்பொருட்களை விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு டி டி வி தினகரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மணடல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 44 Sec.)***

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள திரு சரவணன் கூறியுள்ளார்.

---------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி சினேகா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

------------------

நெல்லை மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு ஆனந்த் மோகன், தாமிரபரணி நதியை தூய்மைப்படுத்த முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றார்.

---------------

கடலூர் மாவட்டத்தில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------

அரியலூர் மாவட்ட ஆட்சியராக திருமதி மிருணாளினி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

---------------

சேலம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 8 லட்சம் ரூபாய் மதிப்பிலான செயற்கைக் கால்களை ஆட்சியர் திரு இளம்பகவத் இன்று வழங்கினார்.

---------------

சென்னையில் உள்ள தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில், தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

வரும் **15** -ஆம் தேதி தொடங்கி **19**-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா **4-1** என்ற கோல் கணக்கில், தென்கொரியாவை வென்றது.

ஜப்பானில் நடைபெற்ற இப்போட்டியில், **Ketan Kushwaha** இரண்டு கோல் அடித்தார்.

**Varinder Singh, Shahrukh Ali** தலா ஒரு கோல் அடித்தனர்.

----------------

**Prishtina** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **11-6, 9-11, 11-7, 8-11, 11-6** என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Yeh Yi Tian**-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Divyanshi Bhowmick — Syndrela Das** இணை பட்டம் வென்றது.

----------------

நார்வே செஸ் போட்டியின் மகளிர் பிரிவு ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் எட்டரை புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

-----------------

சீனாவில் நடைபெற்ற **20** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், பத்து தங்கம் உட்பட **19** பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

-----------------

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — பிரேசிலின் **Marcelo Demoliner** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**